Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered
Sessions

Case No. **S.C. No.1 of 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW15(LW21)** |
| Name | : திருமதி.லட்சுமி |
| Fathers Name | : ஆறுமுகம் |
| Village | : தருமபுரி |
| Taluk | : தருமபுரி |
| Calling | : வட்டாட்சியர் |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது இந்து சமய அறநிலை துறையில் தனி வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.11.2024ம் தேதி பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நான் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது மகேந்திரமங்கலம் காவல் நிலைய முதல்நிலை காவலர் அம்சராஜ் என்பவர் கொலை வழக்கு சம்மந்தமாக ஜாதி சான்றிதழ் கேட்டு வந்தார். அசோக்குமார் (எ) வேல் மற்றும் சத்தியமூர்த்தி என்ற இரு நபர்களுக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு வந்தார். அவர்கள் இருவரும்

பென்னாகரம் சமத்துவபுரத்தில் குடியிருந்து வருவதாகவும் அந்த வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த வேண்டுகோள் கடிதத்தின்படி நான் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகிய இருவரிடமும் அறிக்கை பெற்று அவர்கள் இருவரும் ஆதி திராவிடர் சமூகத்தை சார்ந்தவர் என்று 25.11.2024ம் தேதியில் சான்றிதழ் வழங்கினேன். நான் அசோக்குமாருக்கு வழங்கிய ஜாதி சான்றிதழ் **அ.சா.ஆ.9**, சத்தியமூர்த்திக்கு வழங்கிய ஜாதி சான்றிதழ் **அ.சா.ஆ.10**. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–இல்லை**

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 20.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.20 17:02:19 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.